**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 422 / 2021 |
| Deposition of witness for Prosecution | : | P.W – 3 |
| Name | : | பாலமுருகன், வயது 45 |
| Father Name/Husband Name | : | வேலுச்சாமி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | லோடுமேன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of September 2022.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசிக்கிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். எதிரி முத்துராமலிங்கம் என்பவரை நான் ஒருமுறை பார்த்துள்ளேன். அவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை பார்த்தால் அடையாளம் தெரியும்.
2. எனது உடன்பிறந்த தங்கை முருகலட்சுமி என்பவரிடம் எனது மனைவி நான் கீழே விழுந்தது தொடர்பாக பூஜை செய்ய வேண்டும் என்று அவரிடம் கேட்டுள்ளார். அதற்கு எனது தங்களை அவருக்கு தெரிந்த நபர் பரிகார பூஜை செய்வார் என்று சொன்னதன் பேரில் கடந்த 08.05.2021 ஆம் தேதி நான் வெளியில் சென்றிருந்த சமயம் எங்கள் வீட்டில் வைத்து 2 பவுன் தங்க செயினை வைத்து பூஜை செய்ததாக அ.சா.1 எனது மனைவி என்னிடம் கூறனிார்.
3. பின்னர் 13.05.2021 ஆம் தேதி டிவியில் எதிரி முத்துராமலிங்கம் என்பவர் நகைகளை திருடியதாக பார்த்து எங்கள் வீட்டில் இருந்த டப்பாவை திறந்து பார்த்த போது அதில் இருந்த தங்க நகையை காணவில்லை என்று அ.சா.1 என்னிடம் கூறினார்.
4. பின்பு மேற்படி சம்பவம் தொடர்பாக நான் எனது மகள் மற்றும் அ.சா.1 உடன் காவல்நிலையம் சென்று நடவடிக்கை எடுக்க கோரி புகார் அளித்தோம். அது பற்றி போலிசார்என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. உங்கள் வீட்டில் பூஜை நடந்த விவரங்கள் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். டி.வியில் வந்த செய்தியை நீங்கள் பார்க்கவில்லை என்றால் சரிதான்.
2. உங்கள் மனைவி கொடுத்த புகார் மனுவை யார் எழுதியது என்றால் எனது மகள் எழுதினார். நடந்த சம்பவத்தை போலிசாரிடம் சொன்ன

பின்பு தான் புகார் மனு எழுதினீர்கள் என்றால் சரிதான்.

3. நீங்கள் சொன்னது போல் சொன்ன தேதியில் கேள்விப்பட்டதாக சொல்லும் தகவல் உண்மை அல்ல என்றால் சரியல்ல. போலிசார் உங்களை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள்.

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.